2026 – ஆகஸ்ட் மாதம் 11– ஆம் தேதி செவ்வாய்கிழமை.
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 64/2024*

*2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 – ஆம் தேதி செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய* R W *2 ,* வது நபரின் வாக்குமூலம் *(1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. சவிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW 2, கிருஷ்ணமூர்த்தி |
| தந்தையார் பெயர் | : | ராமதாஸ் |
| ஊர் | : | வேட்டக்குடி |
| வட்டம் | : | விருத்தாசலம் |
| மாவட்டம் | : | கடலூர் |
| தொழில் | : | முன்னாள் ஓட்டுநர் |
| வயது | : | 58 |

<u>**தேதி: 11.08.2026.**</u>

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் தற்பொழுது கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம் வேட்டக்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஓட்டுநராகவேலை பார்த்து வந்தேன். தற்பொழுது வேலை எதுவும் செய்யவில்லை. நான் இதற்கு முன்பு தனலெட்சுமி கல்லூரி பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன். சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பு புதுக்கூரைப்பேட்டையில் உள்ள பேரிகார்டு அருகே ரோட்டின் இடதுஓரமாக பேருந்தை நிறுத்தியிருந்தேன். அப்பொழுது இருசக்கர வாகனம் வந்து மேற்படி பேருந்தின் முன்பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டது. உடனே நான் வண்டியிலிருந்து இறங்கி விருத்தாசலம் காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டேன்.

பேருந்தின் மீது லாரி மோதியதா என்றால் லாரி எதுவும் மோதவில்லை. விபத்திற்கு நான் காரணம் இல்லை.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:– இல்லை.</u>**

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

**ஒம்/– கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**